செ.வெ.எண்.57 நாள்.22.12.2017.

**<u>தொழில் துவங்க அரசு மானியத்துடன் வங்கிக் கடன்</u>**

**<u>டிசம்பர் 26 - ல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி (SC/ST) தொழில் முனைவோர்க்கான சிறப்பு முகாம்</u>**

தமிழக அரசு குறு ,சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையை வெளியிட்டு மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) , புதிய தொழில் முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி (SC/ST) இனத்தவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. அவர்களுக்கு விண்ணப்பங்களை இணையதளம் மூலம் இலவசமாக பதிவு செய்யவும் , தொழில் கடன் குறித்த அனைத்து விதமான வழிகாட்டுதலை வழங்கிடவும் திருநெல்வேலி மாவட்ட தொழில் மையம் சிறப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறைந்தது எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் ஐ.டி.ஐ, டிப்ளமோ மற்றும் டிகிரி தேர்ச்சி பெற்ற தகுதியானவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற கடன் உதவி திட்டத்தை தேர்வு செய்யலாம்.

இது தொடர்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி ( SC/ST ) தொழில் முனைவோர்க்கான சிறப்பு முகாம் டிசம்பர் 26, காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தில் நடைபெறவிருக்கிறது.

விருப்பமுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ( SC/ST ) உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அழைக்கிறார்.

இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு மாவட்ட தொழில் மையத்தை நேரிலோ அல்லது 0462 - 2572162, 2572384,9944778929 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**